175

ஓ

சிவமயம்.

குற்றாலமகத்துவம்

இராமலிங்கக் குருக்கள்

கிரந்தகர்த்தா & பப்ளிஷர், விருதுநகர்.



குழல்வாய்மொழியம்மை, திரிகூடநாதர்.

விருதுநகர், ஸ்ரீமான்

இராமலிங்கக குருக்களவர்களது

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1924.

அணு 1.

I2 JUN 1972

Q23:39.2197KU

N24.

18/1938

உ

சிவமயம்.

குற்றாலமகாத்துவம்

இராமலிங்கக் குருக்கள்

கிரந்தகர்த்தா & பப்ளிஷர், விருத்தாசலம்.



12 JUN 1924

குழல்வாய்மொழியம்மை. திரிகூடநாதர்.

விருத்தாசலம், ஸ்ரீமான்

இராமலிங்கக் குருக்களவர்களது

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1924

இதன் விலை அணா 1.

சிவமயம்.

வேலியில் வீழ்த்த கல்லு மென்குடம் புரூத்த வென்புஞ்
சாலியிற் கொளுவுந் தீயுந் தரங்கநீர் வைகை யாறுஞ்
சோலையாண் பனையும் வேதச் சதவழுந் தொழும்பு கொண்ட
வாலியாந்தமிழ்ப்பூஞ் செல்வி வளர்தமிழ்ப் பாண்டி நாட்டுள்.

பாண்டிவள நாட்டிலே தென்றமிழ் வளர்த்த தண்டமிழ்க் குறுமுனி வகித்த பொதிசுமலைச் சாரலே யடுத்ததும், தேவாரப் பதிகம் பாடப்பெற்ற பாண்டிஸ்தலங்கள் பதினான்கினுள் ஒன்றுகி யதும், நான்குவேத சொரூபமாகிய குறும்பலா நீழலில் திரிகூட நாதர் வீற்றிருப்பதுமாகிய ஸ்தலமகிமை வாய்ந்துள்ள திரிகூடத் தில் வடவருவியில் நீர்த்த மாடினவர்களுடைய பாவங்களெல்லாம் கழுநீர்போலோடுமெனவும், அவர்கள் கண்ணுக்கு அவ்வருவியிலே இந்திரவில்தோன்று மெனவும், கன்ன பரம்பரையாகச் சொல்லி வந்ததை இற்றைவரைக்கும் காணலாம். இதுவல்லாமலும் தற்கா லத்திலுள்ள ஆங்கிலேய டாக்டர்களும், ஆங்கிலேயசாஸ்திரிகளும் வடவருவியில் மூழ்கி தென்றல் காற்று சரீரத்தில் படும்படி சரல் காலத்தில் சில காலம் வசித்தால் எவ்வித ரோகங்களும் ஔஷத சிகிச்சை செய்யாமலே சுகப்படுகிறதென்றும் கூறியுள்ளார். வட வருவியில் மூழ்கியவுடனே சாதிபேதங்களும், சமைய பேதங்களு மாறி, யேக சாதியர்களாய், ஏக மதஸ்தர்களாய் சாதிமதச் சண் டாளத்துவத்தை விட்டு நீங்கி மெஞ்ஞானிகளாய் விடுகிறார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

செல்வமல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லி மூலிலைமெல் லரும்பினுங் குற்றாலம்
வில்லினுலகு சூழ்மழகி லெய்து வினைபோக
நல்குமம்பா னன்னக ரேபோ நமரங்காள்.

1/8938

மூலமந்திரம்.

அகவற்பா.

செகத்தினில் மிகுத்த மகத்துவமுடைய
அகத்திய முனிவன் அமர்ந்திடும் பொதிகை
மலையினை யடுத்து வளம்பல நிறைந்து
கலைமறை முனிவர் நிலைபாய்த்தவஞ்செயும்
மண்டலத் துயர்ந்த தண்டமிழ் நாட்டில்
கண்டவர் கண்ணைக் கவர்ந்திடும் படியாய்
பார்த்தவர் கண்ணைப் பறித்திடும்படியாய்ச்
சீர்த்திகள் வாய்ந்த திருக்குற் றாலம்
மாகரிமை நிறைந்த மலைவள மோங்கிக்
காகினிகள் மிகுந்திக் ககனமீ தயர்ந்த
திரிகூ டத்தில் சிவமது கங்கைப்
பெருமையை வாயாற பேச வொண்ணாது
சித்திரா நதியுஞ் செண்பகத் தடாகமும்
புத்தியைக் கொடுக்கும் பொற்குமா கடலும்
ஆடின பேர்கள் அநேகநா ளிருப்பார்
நாடியே நினமும் நன்மைக ளுதவும்
வடகரு வியிலே திடமுடன் முழுகிக்
கடவுளை நினைத்தால் கழிந்திடும் பாவம்
எல்லாப் பிணியும் இரவிமுன் பனிபோல்
நில்லா தோடும் நெடுநாள் வாழ்வார்
சோம்பலை யகற்றிச் சுகமாய் வாழ்வார்
தேம்பல் வீசன் திருவருள் கிடைக்கும்
தென்றல் காற்று தேகத்தில் வீச
தின்றிய நோய்கள் தூரவே செல்லும்
செல்வம் பெருகிச் செழிப்பாய் வாழ்வார்
கல்வியு மிகுத்துக் கனமாய் வாழ்வார்
புத்திரப் பேறும் பொருந்தியே வாழ்வார்
சித்திர தென்போல் செகத்தினில் வாழ்வார்
மூலம் பவுந்திர மூத்திர ரோகம்
கோலெடு கூச்சும் முடக்கு வியாதி

இருமல் புகைச்சல் சளிநோய் காசம்
பொருமல் வயிறு புகைந்திடுங் கண்ணோய்
பீனிசம் வெட்டை பெரும்பா டாம்பல்
மேனிக் கிரந்தி வீக்கம் பாண்டு
சூலை காமாலை சூதகக் கட்டு
காலை முடக்கும் கள்வாத நோய்கள்
எல்லாப் பிணியும் இளந்தென்றல் முன்னே
நில்லா தோடும் நிச்சயம் நிச்சயம்
அந்திபும் சந்தியும் அருவியில் முழுகி
வந்தவர் தமக்கு சித்தையில் தெரியும்
இன்னுமிப் பெருமை யிசைத்திட வென்றால்
என்னெரு நாவா லிசைக்க வொண்ணாது
பலாவடி யிருந்த பரமன்
நிலாவணி யீசன் நிகழ்த்திடு வானே.

சிவமயம்.

குற்றால மகத்துவம்.

விநாயகர் துதி.

திருக்குர்ச்வினி திருக்குங் கயிலாச வரைப்பரமன் கருணை மூர்த்தி
முற்றுமதிச்சடையன் புனலோடு முகத்தனடி முடிமேற் கொண்டு
குற்றலம் புகழ்பாண்டி நாட்டினுக்கோர் திலகமென விலைப் பெற்று
குற்றாலத் தலர்ந்தீர்த்த மூர்த்திமகத் துவமெடுத்துக் கூறுவோமே.

திரிகூடராதர் துதி.

கிலேகோரைக் கிலேத்தபல சோம்பெலாஞ் சதுரவேதக்
கிலேக னின்ற
கனேபெலாஞ் சிவலிங்கக் கனிபெலாஞ் சிவலிங்கக்
கனிகள் வாய்த்த

குற்றுலமகத்துவம்.

ஆலையெலாஞ் சிவலிங்கம் வித்தெலாஞ் சிவலிங்கச்
சொரூப மாக
வீலையுமொரு குறும் பலன்ன முளைத்தெழுந்த சிவக்
கொழுந்தை வேண்டு வோமே.

குழல்வாய்மொழியம்மை துதி.

இமையவரைக் குலக்கொழுந்து கயிலைவரை மேருவரைக்
கிறைவி வேதச்
சிமையவரைத் திரிகூடச் சிவக்கொழுந்து மணக்குமொரு
செழும்பூங் கொம்பு
சமையவரைப் புரக்கவருட் கடல்சுரந்து மடைதிறந்த
கண்ணு ளெனனுஞ்
சமைபவரைத் தலைவிகுழல் வாய்மொழியம பிகைதிருத்தா
டலைமேற் கொள்வாம

குற்றுலப் பெருமை வெண்பா.

கற்றுதவுஞ் சற்றவேண் டாம்புலவீர்
குற்றுல மென்றெருகாற் கூறினல்—வற்று
வடவருவி யானே மறுபிறவிச் சேற்றில்
நடவருவி யானே நமை.

இத்தலத்திற்கு இருபத்தொரு பெயர்களுண்டு. அவையாவன:

1 பிதுர்கண்டந்தீர்த்தபுரம்,
2 சிவத்துரோகந்தீர்த்தபுரம்,
3. மதவண்டானுயிர்மீட்டபுரம்,
4. பவர்க்கமீட்டபுரம்,
5. வசந்தபுரம்,
6. முதுகக்கைவந்தபுரம்,
7. செண்பகாரணியபுரம்,
8. முத்திவேலிபுரம்,
9. சதிமூன்றின்மரகதம்,
10 திருநகரம், 11. நன்னகரம்
12 ஞானபாக்கம்,
13 வேடன்வலஞ்செய்தபுரம்
14 வேழம்பூசித்தபுரம்,
15. சத்திபீடபுரம்,
16. சிவமுகுந்தபிரமபுரம்,
17 முனிகுருதும்பேர்
18. தேவகூடபுரம்,
19. திரிகூடபுரம்,
21. குறும்பலாவிசடபுரம்

18938

1 குற்றால மகாத்துவம்.

தீர்த்தங்கள் ஐந்து. அவையாவன:—

1. சிவமதுகங்கை, 2 சென்பகத்தடாகம்,
3. பொன்சுமாகடல், 4 வடவருவி, 5. சித்திராநதி.

தக்கபூமிக்கு மூன்புள்ளநாடு சகல தேவர்க்கு மன்புள்ள நாடு
திக்கெலாம் வளர்ந்தோங்கிய நாடு சிவத்துரோகமு நீங்கிய நாடு
முக்கணன்விளை யாடிய நாடு முதிய நான்மறை பாடிய நாடு
மைக்கணுள்சூழல் வாய்மொழிபாகர் வசந்தவாரிய நாடெங்கள் நாடே.

ஞ்சுநூறு மகங்கொண்ட நாடு அநேககோடி யுகங்கொண்டநாடு
ந்தயோனி யுதிக்கின்ற நாடு கமலவாணி துதிக்கின்ற நாடு
சஞ்சொல் மாமுனி யேகிய நாடு செங்கண் மால்சிவ னுகிய நாடு
வஞ்சிபாகர் திருகூட நாதர் வசந்தவாரிய நாடெங்கள் நாடே.

மாதமூன்று மழையுள்ள நாடு வருஷமூன்று விளைவுள்ள நாடு
வேதமூன்றும் பலாவுள்ள நாடு விசேஷ மூன்றுங் குலாவுள்ள நாடு
போதமூன்று நலஞ்செய நாடு புவனமூன்றும் வலஞ்செயும் நாடு
காதமூன் றருவானகுற்றால நாதராரிய நாடெங்கள் நாடே.

நீங்கக் காண்பது சோந்தவர் பாவ ம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்தெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தியிர் மத்து
வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
பேங்கக் காண்பது மங்கலப் பேரிகை
யிசராரிய நாடெங்கள் நாடே

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஓடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்
வாடக் காண்பதுன்னர் மருங்கு
வருந்தக் காண்பது சூதுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து

குற்றாலத் தலபுராணம்.

தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக் குற்றாலத் தென்னரி யாடே

வடவருவித் தீர்த்தமதில் வைகாசிக் கடைசிமுதல் மூன்றுமாகம்
இடைவிடாதே முழுகி யிருந்தவர்கள் நோயின்றி யின்பமெய்தித்
திடமிகுசம் பத்தடனே சிறஞ்சீவி யாய்வாழ்ந்து தேசமெச்சக்
கடவுளரு ளாலதிக புகழோங்கி யெஞ்ஞான்றுங் களிப்பர்மாதோ

நல்லியாதனுஞ் சனகரும் புகழ்வது நவில்வோர்
தொல்லியாதியும் பாவமுந் தொலைப்பது சுருதிக்
கல்லியாவையு முணர்வையுங் கொடுப்பது கருதிச்
செல்வம்வீடு பேறளிப்பது செண்பகா ரணியம்

ஐந்துநூற்றுவ ரந்தணரு மகச்சாலை
சிந்தையாய் மூததவம்புரி தேவாச்சிரமம்
கொந்துபூங்குழற் பரையுடன் பிரணவை கோயில்
சந்தனுடவி வேலிசூழ் சண்பகா ரணியம்

பிரசமா மலர்ச் செண்பகப் பொதும்பரிற் பிறந்து
திரவுபூஞ்சினைத் தொட்டிலாட் டயர்ந்து தேனருவிப்
பரமவாரியிற் படிந்துநீள் பணிலமாக் கோயிற்
குரவன்முன்றில் வாய்த்தவழ்வ தோர்தென்ற லங்குழவி

கண்ணிகள்.

ஞானிகளு மறியார்கள் சித்தாந்த மூலம்
நானறிந்த வகைசிறிது பேசக்கேள் அம்மே

மேன்மை பெறுங் திரிகூடத் தேனருவித் துறைக்கே
மேவுமொரு சிவலிங்கத் தேவரக சியமாய்

ஆனதுறை யயனுரைத்த தானமறி யாமல்
அருந்தவத்துக் காய்த்தேடித் திரிந்தலையுங் காலம்

மோனவா னவர்க்கெங்கள் கானவர்கள் காட்டு
மூதுகங்கை யாறுசிவ மதுகங்கை யாறே

சிவமதுகங் கையின்மகிமை புலனெமக்கும் புகழுஞ்
செண்பகா டவித்துறையின் பண்பு சொல்லக் கேளாய்

குற்றால மகாத்துவம்.

தவமுனிவர் கூட்டமும் அவரிருக்கும் குகையுஞ்
சஞ்சீவி முகலான விஞ்ஞை மூலிகையும்
கலைசித்த ஜாதியரு மெனனயோ கிபருங்
கந்திருக்கும் கயிலாயம் ஒத்திருக்கும் அம்மே
கவுரிதயம் விளையுமிடம் அவிடமது கலந்தால்
கங்கைமார் குரவை யொலிப் பொங்குமா கடலே
பொங்குகடல் திரிவேணி சங்கமெனச் செழிக்கும்
பொருந்தசித்திர கதித்தறைகள் பொன்னுழுத்தங் கொழிக்
கங்கையெனும் வடவருவி தங்குமித்ர சாபங் [க்கு
கலந்தாடிற் கழுநீராய்த் தொலைந்தோடும் பாபம்
சங்கவீ திவிற்பரந்து சங்கினங்கள் மேயுந்
தழைத்தமதிட் சிகரமெங்குங் கொழுத்தகயல்பாயுங்
கொங்கலர்செண் பகச்சோலைக் குறும்பலா வீசர்
குற்றாலத் திரிகூடத் தலமெங்கள் தலமே
மன்றுதனிற் றெய்வபூ சென்றுமேல் முழங்கும்
வளமைபெறுஞ் சதுரயுகவிழுமைபோல் வழங்கும்
நின்றுமத கரிபூசை யன்றுசெய்த தலமே
நீர்தினைசெய் புட்பகந்தன் வந்தனை செய்தலமே
பன்றியொடு வேடன்வலஞ் சென்றநித்த தலமே
பற்றுகப் பரமருளை குற்றாலத்தலமே
வென்றிபெறுந் தேவர்களுங் குன்றமாய் மசமாய்
மிருகமதாய்த் தவசிருக்கும் பெரியதலம் அம்மே.

வாழி.

திரிகூடல் நகர்வாழி தென்றல் வாழி
தெண்ணீர் வீழ் வடவருவித் தீர்த்தம் வாழி
சொரிமுகிற்சா ரலும்வாழி. சுகிக்கு மாந்தர்
சோம்பலின்றி யெஞ்ஞான்றும சுகமாய் வாழி.
[illegible] மழுவேந்தி மன்றுளாடும்
வள்ளலிருக் குற்றால நாதர் வாழி
விரிவாய தமிழ்வேதம் விளங்கச் செய்த
மெய்யடியார் நால்வர்முத லடியார் வாழி

குற்றால மகாத்துவம் முற்றிற்று.

81938

